—பரப்பிரம்மானந்த யோகியை (தண்)

இராகம் சுரட்டி—ஏகதாளம்.

ப. அப்பா தடுத்து விடுவாயே-எனக்கெப்போதிக்
கப்போ வேண்டுவதெல்லாம் (அ

அ. தப்பாமனுந்தனைசி—றப்பாக செய்யும்பக்திக்
கொப்பாக பிறப்புத—ப்பிப்பாயே வேல்முரு (தப்பா).

ச. வேண்டாம்புலசி விருப்பு—இருந்தால்—விலைக்
கோடவே ஊரிப்பு-ஆகைபால்-பெண்டாட்டிபிள்ளைகளை—
கொண்டாடு பவர்களுக்-குண்டாகும் சுகஞ்சொல்லிக்
கொண்டே வருகிறேன் கேள் (அ)

2. டச்சவாரண்டு வந்தால்—போலீசார் பிடிச்சுக்
கொண்டேக புகுந்தால்—பெண்டுபிள்ளைகள்—அச்சமய
முன்னைத் த—ப்பிச்சு கொடுப்பாரோ நிச்சயமாய் சொல்
வாய்—நீயே பழனிமலை (அ)

3. தாக்கிட காலம் வந்தால்—உனக்குப்பதில்-அவனி
வந்து யார்கந்தா—எண்ணிப்பார்-நோக்கியறியும் வழி—ராக்
கியனுரும் வேல் தூக்கி பிரம்மானந்தன்—நீக்கிட வருவா
னப்போ (அ)

4. இந்த சன்னியாசிபோலே-இன்னமுலகில்-உன் தன்
பக்தர்கள் போலே-உன்னையறிந்து-கந்தா கைவிடாமலி-ருந்
தாலப்போகுறுக்க வந்துவிடுவேன் பாருன்-சொந்தக்காரன்
போலே (அ)

5. பணத்தை நம்பினோர்-பிதத்தை—சொல்லுகி
றேன்—பாழாகாதிருக்குமிதத்தை—ஜீவனிலக-பிணத்தைக்
காய் நரிகள்-பிடிப்பதற்குமில்லை-பணத்தை தானதர்மங்கள்
பண்ணுகிறதற்குமில்லை (அ)

6. பரிசைகள் பண்ணவேண்டாம்—நான் எப்படி—
பொறுப்பேன்கைவிடவேண்டாம்-உன்னைநம்பினேன்-சரவண
பவ உனக்-கிருபுறம் போகிற-சுரட்டிக்கந்தாலே-மறந்து
விடாமல் முரு (தப்பா)

7. குருவே குகனே வருவாய்-பரப்ரம்மத்தில்-
மறைந்திட மதிதருவாய்-நசப்புகழ சரவணபவனுன்தன்-



திருத்தொண்டனுக்கு மிந்த—பரப்ரம்மானந்தயோகி-பாடும் (தப்பா)
பாட்டுகளுக்.

(முருகையனே-சிஷ்யனைப்பார்த் துரைப்பது.)

காவடிச்சிந்து.

ஏனோ நீ சாஸ்திரங்கள்-இன்னமும் பார்க்கின்றாய்
சேனானியின் மகிமை-சித்தித்ததைக்காட்டுவேன்
தானாக உலகமெங்கும்-தத்வமஸ்யாதி லக்ஷியம்
நனோ நீயோ தெரிய-நன்றாகக்காட்டிடுவேன்.

(பழனி சமாராதனைக்கு வாழைத்தண்டு வாழைக்காயும்
குடுத்த திற்கு பாட்டு)

தண்டுங்காயும் தப்பாமல்நீர்-
பெண்டுகளாண்கள் பிடிக்கப்பார்
தண்டுகமண்டல தாரியனவர்
கண்டுப் போனுட கொண்டு மகிழ்வார்.

காவடிசிந்து.

தண்டபாணியே வந்து-தரிசனத்தை காட்டிதந்து
சண்ட பிரசண்டமாக-ஷண்முகா-நீவேல்-சத்தி எடுத்து நிறுத்துவாய்
தொண்டனுக் கவமானம்வந்தால்-ஆயரம்யாருக்கினநினைத் [தாய்
தண்டாயுதனென்னும்பேர் தக்குமே-யித்-தரணியில் பூஜை [கிடைக்குமே.

(நக்ஷத்திரக் கோவிலுக்குவந்துஆடிகிர்த்திகையில் ஸ்வாமியை
தரிசித்த காக்ஷியை பாட்டாகப்பாடியது)

இராகம் முகாரி-ஆதிதாளம்.

ப. வேலுங்காவடி-தோளுங்கையில்-
கோலுங் கொண்டுஎன்னைப்-போலுண்டோ ஆட(வே)

அ. மயிலுங் குயிலும்-மகிழ்ந் திடுமலையில்
நிலைத்துரகூத்திரக்கோ-விலுக்குள் முருகா (வே)

ச. தாளமும் மேளமும்-நக்கராயன்மும்
காலையும் சுருதியும்-கலந்து வாசிக்கவும்
தோளில் காவடி தூக்கி-துன்பங்களெல்லாம் நீக்கி
ஆளுவாயாடுவாயென்-அன்புள்ள மெய்தெய்வமே (வே)

2. பாலும் பழமுன்-பக்தனுக்களிப்பாய்
வேலாயுதனே வாவா-ஞான
பாலன்புகழுமுன்-பாட்டுகளிருக்கும் தேன்
போலுலகிலிருக்கும்-புண்ணிய புருஷர்களுக்கு (வே)

3. திருபுரபவனே-திகலொளிபவனே
பரிபுரபவனே-பகலொளிபவனே
சரவணபவனே-செயலொளிபவனே
பரப்ரம் மானந்தஸ்ரூத்-பங்கஜநிலயனே (வேலு)

## இராகம் பூரிகல்யாணி—ரூபகதாளம்.

ப. புலன்களை இழுத்துபிடிக்க முடியவில்லையே—
முருகா (பு)

அ. சலிக்காமல் மனதை-புலன்களை நிறுத்தி
ஜொலிக்கும் பிரம்மத்தில்-சுத்தமாக்கி சேர்ப்பாய் (பு)

ச. உன்னை நம்பின—துனக்கு தெரியும்
என்வினைகளை-எரிக்கபுரியும்
தன்னை தானுகவே—தத்வத்தாலறியும்
உன்னுடைய சக்தி—உதிக்கச் செய்வாய் (பு)

2. மோசம் பண்ணுமல்—முருகய்யா நீ வந்து
நாசமறுக்குவாய்—நாற்றமுண்டாமுடலை
பாசம்வெலக்க-பண்ணி முப்புரங்கள்
நாசமாக்கி நீ—நல்வழிப்படுத்துவாய் (பு)



3. நிறந்தரம் மௌனத்தில்—நின்றிடச் செய்வாய்
முருகய்யா உன்பக்தி—குறையாமல் பண்ணுவாய்
பரப்ரம்மாநந்தனே—பரப்ரம்மத்தில் சேர்ப்பாய்
கருணார்த்ர திருஷ்டியால்—அருணாசலத்தானே (பு)

## இராகம் சங்கராபரணம்—ஆதிதாளம்.

ப. சூசனை சொல்லுகிறேன்—அறிந்துகொள் (சூ)

அ. யாசனை செய்தால்—யாருகொடுப்பார்
மோசம் போகாமலதை—முனையிலேத்திக்கொள் (சூ)

ச. ஆசைகளெல்லாம் விடு—நீ
அதையே ஸ்திரப்படுத்திடு—அப்புறம்
யோசிக்காமல் வந்துவிடு—ரா—னுறைப்பதைமனதிற்
குள்ளிடு (சூ)

11 69/5

2. இட்டதை நீ மறக்காதே—அதை
விட்டுவிடாமல் நில்பேதே—இதை
விட்டால் கெடுவாய் அப்போதே—நல்வழி
கெட்டால் வருமோ—மெய்பாதை (சூ)

3. பாதை விடாமல் நடந்தால்—வெறு
பாதைகளுன் பின் தொடர்ந்தால்—உன்
காதை குடுக்காமலிருந்தால்—மோக
மாதையடையுவாய்—கிடந்தால் (சூ)

4. கிடந்தாலதில் மோசமில்லை—பிணம் போல்
சடத்தை போடிருந்தால் தொல்லை—அடம்
பிடித்தாலப்போ தென்றுமில்லை—புலன்கள்
அடங்கிடும் பார்மனத்தில்லை (சூ)

5. தில்லையி லடங்கினுவில்லை—பிறப்பு
நல்வழி சொல்வரில்லை—உனக்கு

சொல்வதைபிடி அம்புவில்லை—போல்
கொல்லடா சினத்தை குறைவில்லை (கு)

6. குறைவில்லை பரப்ரம்மானந்தன்—வார்த்தை
அறிந்தாலாவான வன்கந்தன்—இதற்கு
ஒரு சந்தேகமுமில்லை சொந்தன்—நிஜ
மறிவிக்க வந்தான்—கவிஸ்கந்தன் (கு)

## விருத்தம்—தோடி

குருவாய் விளங்கும் எந்தன் குகனே எனக்குச் சொந்தன்
திருவாய் மலர்ந்தருளி—தெரிவித்தான் ஸ்ருத்பத்மத்தில்
உருதியாய் நின்றுக்கொண்டு-உண்மையே உரைப்பான்
[கேட்டல்
முருகனே பிரம்மானந்தன்-உருவனாய் வந்தருள்புரிந்தான்.

## வெண்பா.

அப்பாவே முருகய்யா—ஆதரிப்பா யெப்பொழுதும்
தப்பாமல் உன்பக்தி—தத்வமறிந்து-ஒப்பிப்போர்குலத்தில்
உண்மை யறிந்து—மெய்பொருளில் சேர்த்திடுவாய்
மெய்யாய் நீயே.

## இராகம் தன்யாசி—ஆதிதாளம்.

ப. தர்மப்பணம் தின்னவேண்டாம்—கர்மிகளா வீர்கள்.
நீங்கள் (த)

அ. மர்மம் விட்டு சொல்லுகிறேன்—மாண்டுவிடுவீர்
கள். நீங்கள் (தர்)

ச. தர்மம் செய்வேனென்று சொல்லி—தாராளமாய்
பணம் வாங்கி மர்மமாக. மறைத்துவிட்டால்—மாபாதகர்
கள் ஆவீர்கள். (த)



2. ஸகஸ்ர போஜனம் பண்ணுகிறார்—ஸாது பர
பிரம்மானந்தர், ஸகாயம் நீங்கள் பண்ணவேண்டும்—ஸத்
காரியமென்றுரைத்து வாங்கி (த)

3. உத்தியோகம் நான் பண்ணுகிறேன்—உத்தைதகா
செனக்கு வேண்டாம். ஸத்யப் பலமென்று என்னி
ஸாதுபேரை சொல்லி வாங்கி (த)

4. உண்டு எனக்கு ஜீவனம்—உத்தை சல்லி
எனக்கு வேண்டாம்—சண்டாளன் அதிலே நான் தொட்
டால்—பெண்டாட்டி பிள்ளைகளிருக்கார்கள். (த)

5. ஈசுவரன் கையில் கொடுத்த வரையில்—எனக்கு
போதும் இருக்கிறதுஎல்-சாச்வதமா யிருப்பாரில்லை—
சாப்பிட்டால் ஸாது பணத்தை (த)

6. மோசம் போவீர் பணத்தைப்பார்த்தால்—நாச
மாக்கும் ஸாது சொல்தன்-யாசியாய் சொன்னேனிந்தஸந்-
யாசி பரப்பரம்மானந்தன் (த)

7. மாயூரேசன் பேரெடுப்பான்—மதிக்கெட்டீர் என்
சொல் முடிக்க, பாயம்பரப்ரம்மானந்தர்—பாட்டதிர் வெட்
டாகும். (த)

ஷை பாட்டு மாயவரத்தில் பரப்ரம்மானந்த சாது
வானவர் ஸஹஸ்ரப்ராம் மணபோஜனம் செய்ய உத்தேசித்த
உடன் இரண்டொருவர்கள் அவர் பேரைச்சொல்லி ஸகஸ்ர
போஜனம் மேல்கண்ட சாதுவானவர் செய்யப்போகிறா
ரென்றுசொல்லி வாங்கி நட்டத்தின பணத்தில் சுமார் 150—
ரூபாய்வரையில் ஸாப்பிட்டவர்கள் மூலமாய் லோகத்திற்கு
ஹிதோப தேசம் செய்யப்பட்டது.

திருவண்ணாமலையில் தவம் செய்யும்போது மாயவரத்
தில் யிருந்த பணத்திற்கு (8) மாசமாகியும் மிகுந்த பணத்

திற்கு கணக்கு காண்பிக்காமையால் முருகனுக்கு கோபம் வந்து அடியில் கண்டகவி பாடப்பட்டது.

விருத்தம்.

வைத்யன் நானென்று பேர்சொல்லி வாழ்நடேசன்
வைத்யனு தனுமென்று மிருவர்க்குதாக்க-பைத்தியனும்
முருகனைப்பாடும் பிரம்மானந்தன்-வைத்த
சொல்வர் கழுத்திற்கு வாளதாகும்.

இது பகவானே சொன்னது.

முற்றிற்று.



## ஸ்ரீமத் பரமஹம்ஸ, பரப்ரம்மானந்த யோகீந்த்ர, ஸரஸ்வதி ஸ்வாமிகளுடைய.

# பூர்வ பச்சிமாச்ரம சரித்திரம்.

---

ஞானவான்களே! இவர் பூர்வத்தில் பால்யனாயிருக்கும் போது, திருத்தணி தாலூக்கா அரிக்கொளம், என்னும் கிராமத்தி னருகில் "நாபள்ளூர்" என்ற பைரவசயன புரியில் ஜன்மித்து தன் தாய் தந்தையருடன் கூடி சில காலம் வசித்துப்பிறகு, இன்னவருடன் ஸகோதரர்கள், கல்வி கற்கவேண்டி. யடுத்த, புத்தூர் கிராமமடைந்து, லோகல் பண்டு ஸ்கூலில்-படித்து வந்தனர். அக்காலத்திலின்னவருக்கு வயது. 8-பின்-பள்ளியில் 4-வருஷங்கள் வரையில் ஓதிவர இன்னவர் தந்தை-தெய்வயோகத்தினால் வேதாந்தம் வெங்கடகிருஷ்ணய்யரென நாமம் பூண்டு—மந்த்ரிக சிரோமணியாய் வைத்தியத்தில்-தன்வந்தரியாய் அஷ்ட ஸித்திகளடைந்து-வித்யா குருவெனப் பெயர் வகித்து திசைகளெங்கும் த்வனி முழங்கத்தேசங்கள் தோறும் நிறைந்து இராஜாக்களால்கௌரவமடைந்து-தாம் அடைந்த வித்யாகௌசலத்தை-தம்முடைய சிஷ்யர்களுக்கு உபதேசித்து ஷை கண்ட கிராமத்தில் வசித்து வந்தார். இது நிற்க-ஸ்ரீகாளஹஸ்தி ஸமஸ்தானத்திலிருந்து இன்னவரது கீர்த்தியும்-கியாதியும் கேழ்விப்பட்டு (காண்கிரி) மானே

ஜுன-கொத்வால் செங்கல்ராய நாய்க்கர்-தாம் நெடுநாளாக
புத்ரஸந்தானமில்லா மனக்குறையோடிருப்பதை ஷை ஸ்வாமி
டம்போய் சொல்லிப் பிரார்த்தித்த பிறகு இன்னவர் தாய்
தந்தையரையும் இரண்டு ஸகோதரர்களையும் காளஹஸ்தி
க்கு அழைத்துச் சென்றனர். அப்போ தின்னவர்க்கு 13
வயது, அப்போது வெங்கடகிருஷ்ணய்யரும் அவர்கள்
பக்தனுடைய மனக்குறை யொழித்து புத்திர ஸந்தானப்
ப்ராப்தமியற்றி, தான் ஷை புண்யஸ்தலத்தில் புத்திரர்களை
யும் பத்னியையும் விட்டுவிட்டு தகப்பனார் ஜைவயோகத்
தால்-ஸாயுஜ்ய பதவியடைந்தார். இவ்வண்ணம் பிதாவுக்
குப் பின் அவ்வூரில் வசிக்கும்போது அங்குள்ள வேதிய
ரொருவர் இன்னவரை நீ என்ன செய்கிறாய் என்று கேட்
டார் அதற்கிவர்-ஸந்தியாவந்தன மென்னும் அநுஷ்டானம்
மாத்திரம் செய்கிறேன் ஆனால் என்-பிதாவடைந்தநற்கி
த்தியையும் யோக்யதையையும் நான் எப்பொழு ததை
வேனோ-யறியேன், ஏனென்றால், என் மாதாக்களனைவரும்
பார்க்கவ கோத்திரர்கள். எங்கள் வம்சபரம்பரையாய்ஸகல
வித்தையையும் அறிந்த வித்வாம்ஸர்கள். என்று சொல்ல
வேதியர் ஒரு சிவராத்திரியன்று சிவ பஞ்சாக்ஷரியையும்,
பாலாபரமேச்வரியையும் உபதேசித்து அக்ஷரத்தை லக்ஷம்
தடவை உச்சரித்தால்-ஸித்திக்கு மென்றுரைத்து தான்
ஸ்வஸ்தான மடைந்தார். அப்போதின்னவர்க்கு 14-வயது
முடிந்து ஏகாந ஜபதபங்கள் க்ரமப்படி நடத்தி வந்தனர்
அதன் பிறகு தக்ஷிணகைலாஸத்தி லிருக்கும் பாரத்வாஜ
தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து ஷை ஆஸ்ரமத்தில் விடியற்
காலம் 5-மணிக்கே, கிருஷ்ண ஜினத்தின் மேல் பச்ச
மாபிமுகமாய்த் தினம் தவராமல் (1000) ஆவர்த்தி, காயத்
ரியும், 10000 பஞ்சாக்ஷரியும்-15000-பாலயும்-ஜபித்து ஒரு
வாரத்தில் லக்ஷம் பூர்த்திசெய்தார். பிறகு-மாலை 4-மணி



வரைக்கும் ஜபித்து ஸ்வாமியை தரிசித்து வீட்டிற்குச்
சென்று ஒருவேளை அன்னம் புசித்து கிருஷ்ண ஜினத்தை
ஆஸனமாக்கிப் படுத்துப் பிறகு உதயத்திலெழுந்து கிரமப்
படி ஜபதபங்கள் நடத்த ஒரு வாரத்திற்கெல்லாம்-ப்ரபல,
கிருஷ்ணஸாமி அய்யர் அவர்களால் அப்பால் இந்தவிரத்
தத்திற்கு பங்கம் ஏற்பட்டது-பிறகு கொஞ்சம்காலத்திற்
கெல்லாம் (6) லக்ஷம் பூர்த்திசெய்தார். பஞ்சாக்ஷரி பூர்த்தி
யாய் சம்பூர்ணமாயிற்று.பிறகுஇவருக்கு-கவி பாடவேண்டு
மென்று மனதுக் கெட்டிற்று. உடனே அவ்வூரிலுள்ள,
முத்தராஜு நரஸிங்கராவினால் லக்ஷணங்களும் ஸலக்ஷண,
ஸாராதிக்ரந்தங்கள் முதலியவற்று மறிந்து ஒரு நாள் அவ்
வூரில் ஹரிகதாகாலக்ஷேபம் நடப்பதைக் கண்ணுற்றுப் படுத்
துறங்குஞ் சமயம் சிங்கப்பெருமாள் என்னும் ஹரிதாஸ
ரைப்போலே ஒரு ப்ராமணரும் வந்து கவி, பாடவேண்டு
மென்று தெரிவித்தாயே பாலா,இப்பொழுது மனோபீஷ்டப்
படி நடத்து என்று சொல்ல திடுக்கிட்டெழுந்து ஈச்வர
நாமாவை ஸ்மரிக்க-ஜகதீச்வரன்-பிரஸன்னமாய் அருள்
கொடுக்க, அதுமுதல்-சிவபரமாகவும், விஷ்ணு பரமாகவும்
சக்தி-பரமாகவும்-கீர்த்தனங்களை ராமமந்திரங்களிலும்
ஸபைகளிலும் பாடத் தொடங்கினார், இப்படியிருக்க-பத்ய
காவ்யம் சொல்லவேண்டுமென்ற சிந்தனை ஏற்பட்டு பாடும்
புலவோர்க்கு வெண்பாபுலியென்றபடி அதையுமு[illegible]த்து,இவர்
தன்னுடைய பிதாபூஜைசெய்துக் கொண்டுவந்த, பாலாத்
திரிபுரசுந்தரிபேரில் கீர்த்தனமும் பாடிவர முத்தராஜு
நரஸிங்கராவால் கவிபாடுவது யாவர்க்கும் சாமான்யமல்ல
ஆனால் நீர் பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ண லீலையில் ஒன்றான
கோபிகாவஸ்திரா பஹரணம் என்ற கதையைப்பாட்டுகளாக
பாடிமுடிக்கவேண்டுமென அவ்வாறே சிகாமணி கதையை

பூர்த்தியாய் எழுதியபின் அச்சரித்திரத்தை சென்னையில்,
பௌல, நம்மாள்வார் செட்டி யாரிடம் அச்சிடக்கொடுத்தார்
பிறகு கொஞ்ச காலத்திற்கெல்லாம் இன்னவர் ஸகோதரர்
கள் ஸஹிதம் தாயுமாய் காளஹஸ்தியை விட்டு விகாரிவருடத்
தில் சென்னபட்டணத்திற்கே குடித்தனம் வந்து சேர்ந்தார்
கள். சார்வரி வருடத்தில் நவரத்ந ஹஸ்தோத்ர ரத்னதாரா
வளி என்று 100-வெண்பா, பாட்டுகளால் தெலுங்கில்
முடித்து-(எத்தன பூடி) செஞ்சுராமய்யரிடம் அச்சிடும்
படி தந்தார், பிறகு கொஞ்சகாலத்திற்கெல்லாம்-விப்ர
நாராயண சரித்திரமும்—கிரிஜாரமேச நவரத்னமாலிகை
யும் செய்து ஷை செஞ்சுராமய்யர்க்கே அச்சிட்டுக் கொள்
ளும்படி கொடுத்து விட்டார், தவிரவும்-கலிகால மாகாம்யத்
தை ஓடப்பாட்டாகசெய்து ஷை அவருக்கே யிதுவுங்கொடுக்
கப்பட்டது.

அதற்கப்பால் ருக்மிணி கல்யாணம், துருவசரித்திரம்
பரதபாதுகா பட்டாபிஷேகம் இது கள், தத்காலம் பாக
வதர்கள் மஹாராஷ்ட்ர பாணியில் எவ்வாறு கதைகள் செய்
கிறார்களோ அதுபோல்-ஸுகமான வர்ணமெட்டுகளி
யற்றி, சில பாகவதர்களுக்கும் தந்தனர், இதற்கு முன்
பால்யத்திலிருந்து பாடிவரும் ஸங்கீதத்தை லக்ஷணமறிந்து
பாடவேண்டுமென்றெண்ணி பிடில் சிங்கராசாரியாரிடம்
சேர்ந்து (4) வருடங்கள் சங்கீதாப்யாஸம் செய்து
செம்மையாக பாடிவந்தார் ஒழிய ஸ்வரபல்லவிகள் சபைக
ளிடம் பாடத்தெரியாமலிருந்தது. அக்காலத்தில் பால்யஸ்
நேகிதரும் ஸமகாலம் சங்கீத வித்வானுமாயு மிருக்கும்
புதுச்சேரி ரங்கசாமி அய்யர், எட்டியாபுரம் ஸம்ஸ்தான
வித்வான் ராமச்சந்திர பாகவதரிடத்தில் ஸங்கீதாப்யாஸம்
செய்து வந்தனர். அன்னவருக்கு ஹரிகதா காலக்ஷேபஞ்



செய்ய வேண்டுமென்று மிகுந்த ஆவலோடு இன்னவரை
யடுத்தனர். அப்போதிவர்-ப்ரம்ஹ ஸ்ரீ தஞ்சாவூர் கிருஷ்ணா
பாகவதரிடம் மகாராஷ்டிர பத்ததிப்பாட்டுகளும்-கெருட
கெர்வபங்கம் முதலான கதைகளை தெரிந்துகொண்ட
தருணம், அன்னவர் சென்னையில் ஸ்ரீமத்ராமாயணத்தை
காலக்ஷேபஞ் செய்துகொண்டிருந்தர். அக்காரணத்தால்
ரங்கஸாமி அய்யருக்கு ஸீதாகல்யாண சரித்திரம் எழுதித்
தந்து இன்னவரால் அரங்கேற்றப்பட்டது. தவிரவும் தான்
ஸ்வயமாக சில கீர்த்தனங்களும் ஸ்வரங்களும் பாடிவந்
தனர்) இதைக்கேட்ட, ரங்கஸாமி அய்யர் அண்ணா நீர்
இவ்வளவு அபாரஞானம் வைத்துக்கொண்டு சபைகளில்
பல்லவிஸ்வரம் பாடாமலிருப்பதேன் என்றுநயந்துசொல்லி
சில ஜதிஸ்வரங்கள் எழுதிதந்து இதை நான்போஜனத்
திற்குப்போய் வருவதற்குள் த்ரிச்ர,மிச்ர,கண்ட,ஸங்கீர்ண,
சதுரச்ராதி மார்க்கங்களால், வாதிவிவாதி, அனு
வாதி, ஸம்வாதி, ஸ்வரங்களை ஸம்பூர்ண ராகத்தால்
ஸாதனஞ்செய்து த்ருகாலங்களும் பாட தயார் செய்யும்
ஸூக்ஷமத்தைக் காண்பித்து நான் திருவல்லிக்கேணிக்குப்
போய் போஜனஞ் செய்து சுமார் மாலை 4-மணிக்கு வந்து
இன்னவரை பாடச்சொல்லிக்கேட்டு அஸ்தமனத்திற்குப்
பின் ஹைகோர்ட் நாஜருடைய க்ருஹத்தில் பாட்டுக் கச்
சேரிக் கழைத்துக் கொண்டேகினர். அத்தருணமாங்கு
கச்சேரிக்கு வந்த வித்வான்களான புதுச்சேரி ரங்கசாமி
அய்யர் பாட்டு, பிடில்பொன்னுசாமி, மிருதங்கம் முத்துசாமி
தேவர், இவாள்ள கோபித்திருக்கும் வேளை இன்னவரைசபை
யின் முன் பாடச்செய்தனர். ஆயினும், இன்னவர்க்கு மனது
ஸந்தோஷமில்லாமலிருந்து பிறகு வெங்கடகிரி ஸமஸ்தான
ம், மஹாராஜாவானஸர்வக்ஞ குமாரயாசேந்த்ர பூபாலராவி
யற்றிய ஸபாரஞ்சனி என்ற நூலைக்காண மிகவும் ஆவ,

மாய்-பாண்டித்திய ரகஸ்யப்ரகரணத்திலிருந்து மர்மங்கள்
யாவுமறிந்து, சுத்தமாய் கீர்த்தனங்கள் பாடவும் ஸ்வரகற்
பனை செய்து, பல்லவிபாடவும் கீர்த்தனைகளை ஸ்வரப்படுத்
தவும் விசேஷஞான மேற்பட்டன. அதற்குப்பின்—க்ரு
திரத்னம் என்று ஓர் புத்தகமியற்றி அச்சிட்டு தேசங்கள்
தோறும்விற்று அதனைப் பாடியும் வருகின்றனர்-காண்போ
ரெல்லாம் இவ்விதம் பெரியோர்கள் பாடியபடி-கிரமமாகவும்
செம்மையாகவும், தீக்ஷிதர், தியாகராய ஐய்யர் முதலான
வர்கள் கீர்த்தனங்களைப் போல் நன்றியுள்ளதென அங்கீக
ரித்தும் வருகின்றனர் இதில் புதுச்சேரி ரங்கஸாமி அய்யர்
சில கீர்த்தனைகளும்-ஜாவளிகளும் பாடுவதற்குக் கற்றுக்
கொண்டனர். இக்கீர்த்தனைகள் முற்றும் அநேக தேசங்கள்
திரிந்து-ஸ்வாமியின் பேரிலும் அம்மன்பேரிலும் பாடிவந்
தனர்-இவ்வண்ணம் 20, 25, வயதிற்குள் ராமேச்வரயாத்
திரை முதல்யாவும் முடித்து-பாட்டுக் கச்சேரிகளும்-ஹரி
கதாகால க்ஷேபங்களும் நடத்திக்கொண்டு நவராத்திரிகளில்
தேவி பூஜைகள்செய்தும்-மற்றொருபெரியோரால் பஞ்சமுக
வீரப்ரதாப ஹநுமந்த வுபாஸனையும் இன்னும் அநந்தய்ய
ரவர்களால், ஸ்ரீலினிதுர்கா பரமேச்வரி மந்தரம், உபதேச
மடைந்து-மந்தர தீக்ஷாவிதான ஷட்பிரயோக ஸம்ஹார
கிரமங்களையும் கடவுளருளால் அறிந்து ஸகலமும் ஈச்வ
ரார்பணம் என்று இருக்கும்நாளில் இன்னவர் ஸகோதரர்
கள் இருவர், ஒருவர் சித்தேச்வரர்-மற்றொருவர் இளைஞர்
சுந்தரேச்வரர் இவர்களில் சுந்தரேச்வரன் காசியாத்தி
ரைப்போக மனங்கொண்டு புறப்பட அன்னவனுக்கு வுப
தேசித்திருந்த மகாலக்ஷ்மி மந்தரத்தை யுச்சரித்துப்
போகுங்கால் இடையில் மகாநதியிலிறங்கி அக்கரைக்
கடக்கமுடியாதிருக்கும் தருணம் தன்னெதிரில் ஓர் வான
ரம் வேகமதன் பின்றொடர்ந்துபோக அது பர்வதத்தின்



யத்தியில் சேர அங்கு பற்பல கஷ்டங்களநுபவித்து மூன்று
நாளிரவு பகல் பழங்களைத்தின்று மஹரிஷிகளால் உபதேச
மடைந்து மறுபடி சென்னையை யடைந்தனர், அவர்
சரிதை நேரிட் டவரைக் கேட்டால் நன்றாக விளங்கும்.
தவிர, இன்னும் அநேக வித்தைகளும் காணப்பட்டன. சுந்
தரத்திற்கு இவ்விதமதிசயங்கள் ஏற்படக்காரண மென்ன
வென்றால் ஞானம்—மூலகாரணமாக ஏற்பட்டது:—

இவ்வாறு மூவர்கள் வாழ்நாளில்—தெய்வச் செயலாய்
தாய், மரணப்ராப்தியடைந்தாள். ஸகலகர்மங்களையும்
ஒழித்து இச்சிலர் சில இடங்களில் ஸங்கீத சிக்ஷைசொல்லி
யும்—தம்—ராமய்ய வித்தய்யர் யிவர்கள் பின் பாட்டாக
வைத்து சிங்காரச்சாரி முன்னிலையில் ராமமந்திரத்தில்
வத்ஸலாகல்யாணமும் செய்தர்-இப்படியிருக்க காசியாத்
திரைப்போக வெண்ணிப் புறப்பட்டு 1912-௵ 2-ம் ச்ரா
வணசுக்ல தசமியில் குடியாத்தமடைந்து சிலநாள் வசித்
துப் பின் பாத்திர பதமாஸத்தில் புறப்பட்டு பெங்களூரில்
ஸ்ரீ ராமஸ்வாமி கோவிலர்ச்சகர் ராகவாச்சாரியாரைக்
கண்டு அன்னவர் முகாந்தரத்தால் மூன்று கதைகளும்
மற்றொருவரால் இன்னுஞ் சில கதைகளுந்நடத்தி ராய
பகதூர் சுந்தரமூர்த்தி முதலியார் அச்வ சாஸ்திரத்தை
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து திராவிட பாஷைக்கு மொழி
பெயர்த்து,மாக மாஸம் முழுமையும் அங்கிருந்தனர். பிறகு
சென்னைக்கு வந்து நண்பர்களைக் கண்காணித்து ரயிலில்
ஏறி காசிக்குப்போகும்வேளை. தன் இளையஸகோதரனை
சுந்தரனைக் கண்டு உன் முகம்பார்ப்பது இதுவே கடைசி
யானபடியால் பெரியோர்கள் சொற்படி நடவென்று சொல்
லும்போது சமரபுரியென்னும் செட்டியார் யிதையாவு
மறிவார்,சந்தித்தசெட்டியாரும் சுந்தரனும் பேஸின்பிரிட்ஜ்

ஸ்டேஷனோடு இன்னவரை விட்டுவிலகினர். இவரோ காசிப்
பிரயாகை முதலிய யாத்திரைகளை முடித்து ஹரித்வாரம்
போக யெத்தனிக்கும்போது-தேக அசௌக்கியம்
நேர்ந்து போகமுடியாமல் பரஹாம்புரம் வந்து ஓர் சிநேகிதர்
வீட்டிலிறங்கித் தேகம் சௌக்கியமான பின் ஜகன்னாதம்
போய் சுவாமி தரிசனஞ் செய்து அநிகாலிப்பேட்டை—அங்கி
ருந்து மறுபடியும் பரஹாம்புரம் வந்து சின கிமிடி ஜமீன்
தாரிடம் பாட்டுக் கச்சேரி நடத்தி—பிறகு அலிகா ஜமீன்
தாரால் ஓர் கதை நடந்தது. அப்பால் இலங்கைக்குப் பணம்
ஸம்பாதித்துக் கொண்டு சிகடி ஏஸ்டேட்டுக்குப்போய்த்
தங்கிப் பின்—விஜயநகரம்—பிடாபுரம், காகினாடா, ராஜ
மஹேந்திரவரம், ராஜவோல், நரஸாபுரம் முதலிய
ஊர்கள் கடந்து, குண்டூருக்குப் போய் பெஜவாடா வந்து
சென்னையைச் சேர்ந்தனர்.

உடனே ராமேச் வரத்திற்குப்போய் கங்கையபி
அபிஷேகஞ் செய்து சென்னைக்குவந்து—காலம்பரந்தர—
ஸமாராதனை நடத்தினர். திக்கு நவராத்திரி பூஜை ஆரம்பித்து—
பத்துநாள் முடிந்தபின் ஸகோதரன்—வித்தீச்வரனால் மனம்
நொந்து மறுபடியும் ஊரைவிட்டு பெங்களூருக்குப் போய்
கன்டோன்மென்டில்-7-2-1912ல் இரண்டு கதைகளை
நடத்தி ஸ்ரீ ராமநவமி முடிந்தபின்—பதரிகாச்ரமம் ப்ரம்
ஹகபாலம் போக மனநிலைகொண்டனர், அப்பால் ஒரு நாள்
நிஷ்டையிலிருக்கும்போது மதுரைக்குச் சென்று அம்பா
ளை தரிசித்தனம் ஞாபகத்திற்கு வந்து அச்சமை
யம் நினைக்கலாயினர்—கொஞ்ச நேரத்திலெல்லாம் ஸித்
தாஸனத்திலமர்ந்து கேசர முத்ராமார்க்கமாய் ப்ரகாசித்து
வரவரப் புலப்படும் அநேக விசித்திரங்களெல்லாம்
யோசிக்க ஷண்முகி முத்திரைக் காண—பத்துவித நாதங்



களையும் கேட்டு தனக்குள் தானே ஆனந்த மடையும்
காலம் (16-4-13) இது சங்கதி, பெங்களூர் அன்னவஸ்தி
சங்கம் யாவும் ராத்திரி சுமார் பத்து மணிக்கு—உள்ளே
எழுந்து ஹேஜகதீச்வரி இவ்வாறு திரவியத்தினிடம்
ஆசைவிடுத்து நிஜமார்க்கத்தை காண்பிப்பதுக்காலமோ
நான் இவ்வண்ணம் பணத்தின் பொருட்டு எவ்வளவு கதை
கள் செய்யவேண்டும் எத்தனை யிடங்களில் பாட்டுக் கச்
சேரிகள், பாடவேண்டும் இப்படியும்—எவ்வளவென்று கஷ்
டங்களை யனுபவிப்பேன் என்று கதற ராத்திரி சுமார் (2)
மணிவேளைக்கு தினந்தோறுஞ் செய்யும் யோகஸாதனத்
திலேலோ—ஸ்ரீ—சுப்பிரமண்ய மந்த்ரோ பாஸனையினாலோ-
யீச்வரியனுக்கிரஹத்தினாலோ ஓர் பிராம்மண ஸ்வரூபம்
காஷாயம் தரித்து நிறைந்த ப்ரிபூரணராய்—நெற்றியில்
மூன்று ரேகை விபூதியிட்டு, ருத்திராக்ஷ மாலையை கழுத்தி
லணிந்து—லலாடத்தில் சந்தனம்பொட்டு வைத்து
ஜடாதாரியாய் ஈஸ்வர நாமந்தோடு பக்தன் முன்றுலங்கி
(அடா பக்தா) நீ இப்பேற்பட்ட வேடத்தை தரிக்கவேண்
டுமெனப் புகலப் பக்தன் கண்திறந்து மெய் ஞானத்தால்
நாற்புரம் திசையை ஆராய்ந்து பார்க்க ஒருவரும் அவ்வி
டத்திற் காணோம். உடனே திடுக்கிட்டெழுந்து ஸகலமும்
அசாச்வதமென்றும் யாவும் மாயை யென்ற [illegible]ந்தகாரத்
திற் கட்டுண்டதென்றும் பரமாத்மாவின் நாமாவைத்த
விரப் புவியில் வேறொன்றும் கதியில்லை யென்றும் தெய்வத்
தைநம்பினவர் மோசமடையார் என்ற நீதிசொல்ல ஞான
உதயமாய் பதரி காச்ரமத்திற்கு போவதே நல்லது என்றா
லோசிக்க (19-4-13) முதல் நித்தியமும்-வஜ்ராஸனம் அல்
லது ஸித்தாசனத்திலிருந்துகேசரமுத்திராவலோகியாய் ஏற்
பட்டவரையில்லா நித்துவ ஹோட்டலில்போஜனஞ்செய்து
வர-அவ்வோட்டலுக்கு, அதிகாரியான, நாய்க்கரின் சமை

யற்காரன் எஜமானனுக்கு கஷ்டமேற்படச் செய்யவேண்டு மென்றெண்ணி சாப்பிடவரும் மனிதர்க்குச் செய்யும் இடையூர்களாவன—இதோ நான் வயறு எறிந்து சமையல் செய்துப் போடுகிறேன். நீங்கள் சாப்பிட்டாலும் ஒன்று தான் சாப்பிடாவிட்டாலும் ஒன்று தான் என்று எரிச்சலு டன் சொல்ல இன்னவர் ஆஹா யீதென்ன ஆச்சர்யம்— மாதம்—1க்கு (ரூ. 8-அணா 8. பை. 0) குடுத்தும் பசி வேளைக்குத் தகுந்த அன்னமில்லாமலும்-போஜனத்திற்குச் சென்றபின்-½மணி வரையிலும் கவனியாமலும் கடைசி யில்—முகத்தடி, வாயடி, கையடியாக, எறிந்சி விழுந்து பருமாருமிவன்—அனாசாரம்-அதிதுர்மார்க்கம் மூர்க்கத்தன முள்ள வார்த்தைகள் கண்டு கதர நாயகர் மனம் நொந்து, சமயற்காரனை-கொல்லவோ-அடிக்கவோ-திட்டவோ மனம் துணிந்தன-வாயினும்—இப்படியும் நம்மை ஹோட்டல் சாப் பிடவைத்த தெய்வம் கண்திறந்து பார்க்க வொண்ணுதா— என்று சிந்திக்க ஓர் யோசனைப் புலப்பட்டது-நாம் இனி இப்பேர்ப்பட்ட ஸ்தலத்தில் அன்னம் புசிப்பதில்லை யென தீர்மானித்து (21-4-13) முதல் தன்னிருப்பிடத்தில் ஸ்வ[illegible]க-தே[illegible]ழமை ரொட்டி, பால் அல்லது வெந்நீர். இது களால் ஆகாரஞ்செய்துவந்தனர். (22-4-13)ல் மத்தியான்ன காலங்களில் ஸ்நானம்—அநுஷ்டானம் இது களுக்குவேண் டிய கஷ்டங்க ளேற்பட்டன. அதையும் கவனியாமல்—நித் திய கர்மங்களை முடித்து ஆகாரவிஷயமாய் ரொட்டிகள் செய்யும்போது—இந்தக் கர்மங்களை நிவர்த்திக்கப்படா— நான் மூன்றுபடிவது உனக்கழகா அல்லது உனக்கு காது கேழ்க்கவில்லையா என்று ததரும்போது ஈச்வரனுக் கிர ஹத்தால் ஆகாயத்தில் கேழ்வி யுண்டாயின. ரொட்டிகள் செய்யும்போது சாப்பிடும் தொழில் கஷ்டமென்றால், அதற்கு காரணங்கள் ஏகமாயிருக்கிறதே—அடுப்பு வரட்டிகள்—



கட்டைகள்—சாம்பல் கறிகள் வாறிகொட்டுதல்— செம்மையாக—மொழுகுதல்-பாண்டங்களைச் சுத்திசெய் தல் இவ்வளவு கஷ்டமாவென்று (பிரியமஸ்டவ்) வாங்கினால் சுலபமென தோன்றின அதற்கோ கிரோஷின் ஆயில்— ஸ்பிரிட், தவா—தட்டு, ஸ்பூன், ரூலர், முதலியவைகள் தேவை, கேவலமான ரொட்டியாகாரத்திற்கே இவ்வளவு வஸ்துக்கள் தேவை யிருக்க, அன்னம் ஸாப்பிடுகிறதற்கு, அன்னம், சாம்பார், ரஸம்—பச்சடி வகையறுக்கள் காய் கறிகள் இவ்வளவு செய்வதற்கு எவ்வளவு உபகரணங்கள் தேவையென்ற விஷயம் பார்த்தாலன்றோ கண்ணுக்குத் தெரிகிறது இது தான் ஸம்ஸார விருத்தி, கர்மங்கள் அதிக மாகுவதற்குக் காரணங்கள் அதிக வியாபகமாகும் என்று சொல்லி குரைக்க(டீ, காபி,) இவைகளுக்கு எத்தனை யுபகரணங்கள் தேவையாரும்—ஸ்பூன் ஒன்று மாத்திர மிருந்து என்ன பிரயோசனம்—என்றடிக்கடி யிதை நினைத்து கசிந்துருகி ஸாத்விகாஹாரம்-ஸுலபமன்றோ வென்மறு நாள் முதல், பால், பழம், உண்ண வெத்தனித்தனர். இவ்வண்ணம் நடந்தேற (22-4-1913) மாலை (6) மணிக்கு யோகதண்டம் கொண்டுவர வெளியிற் புறப்பட்டனர். அச் சமயம்—திப்பய்யரும்-மற்றொருவரும் இருவருமாய் எதிர்ப் பட்டு ஸ்வாமீ என்ன ஒருவாறாக யிருக்கிறீர் காரணம் யாதென அப்பொழுது அய்யா—எனக்குயிப் பிரபஞ்சமனித்தியம் என்றும் எப்பேற்பட்ட ஊழியத்தொழில்களைச் செய்தாலும் பணஞ் சம்பாரிப்பதற்கன்றோ, அந்தப் பணம் எவ்வளவுக் கவ்வெளவு வருமோ—அவ்வளவுக் கவ்வளவு கரும்ம் பெருகும், தவிரவும்—பொய் பேசும் படிச் செய்யும். இதைமனதில் யோசித்துப் பார்த்தால் நன்று விளங்கும்—ஆதலால் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரம ஹம்ஸ ஆகாசத்தில் தோன அன்னவரைப் பார்த்து

என்னை க்ருஷ்ண பரமாத்மாவை, யெப்பொழுது சேர்பா
யோ யென்று, இப்படிக் கிஸ்தோத்திரம் பண்ணின பிறகு,
பயப்பட வேண்டாம், நாங்கள் யெல்லோரும் ஸமயத்தை
நிரீக்ஷித்துக் கொண்டிருக்கின்றோம், உன்னை கைவிட மாட்
டோமென்று தரிசனம் கொடுக்க, கண்களிலா னந்தாச்ருவு
கள் ததும்ப என்னை கைவிடவேண்டாம் எனப்ரார்த்தித்துக்
கொண்டு யிந்த ஸங்கல்ப தரங்கங்களினாலே பங்கமடையும்
அந்தரங்கத்தினாலே, பரிதவித்துக் கொண்டிருக்கின்றேன்,
யென்னை உத்தரிக்கவேண்டும், என்று சொன்ன, 10-நிமி
டங்களிலே, யின்னம் நீ கொஞ்சகாலத்திற்குள் கோரிகை
யுடைவாய் யென்று அந்தர்த்யானமடைந்தார். இச்சங்கதி
யெல்லாம் இப்பய்யருக்கும் மற்றொரு பிரமணருக்கும்
தெரியப்படுத்தினார். பிறகு அவ்விடம் விட்டு, புறப்பட்டு
வெளியில் வந்து சில காலத்திற்குள். ஏ. வி. சங்கம்
பிரஸிடெண்ட் அவர்கள் வந்தார் சிலகாலம் அவருடன் உட்
கார்ந்து, பலகாரத்திற்க்காக பால், பழங்கள் ஆகாரமான
பின் சங்கத்திற்கு வந்து 11-மணிமுதல் 1¼-மணிவரை
யில் சித்தாசனத்தில், கேசரமுத்ராமார்க்காவலோகியாய்,
இருந்துகொண்டு, பிறகு சிலநேரம் ஷண்முகிமுத்ரயில்,
பார்க்க அதில் நாதாதிதங்களான, ஜோதிர்மயமாய் விளங்கு
கிற பிரகாசம் ஒன்று காணப்பட்டது. அப்பிரகாசம் 10,
அல்லது 15 நிமிஷங்கள், மழைகாலத்தில் மேகாவிருதமாய்
இருக்கும் சூரியன், காற்றினாலே விலக்கப்பட்ட மேகங்களி
லிருந்து 12-மணி நேரத்திற்கு பிரகாசிக்கும் மாதிரியாய்
காணப்பட்டது. பிராணயாமம் பண்ணி கும்பித்து இருக்
கும்போது மாத்திரம் இப்படி புலப்பட்டன. ஆஸனங்கள்
போடுகிறதும் யோகோப யோகமான ஸாதனைகள் செய்
வதும் இப்படிக்கு இரண்டு மணிநேரம் வரையில், செய்து
பிறகு கேசரமுத்திரையில் பார்த்துக் கொண்டிருந்தார், நித்



திரை வந்ததும் வராததும் அவருக்கே தெரியவில்லை. இப்
படி 4-மணிநேரம் வரையில் இருந்து எழுந்து தந்தசுத்தி
செய்து கால், கை, முகம் முதலியவற்றை ஜலத்தினால்
சுத்தி செய்துகொண்டு—மேல்கண்ட மார்க்கத்தின் வழி
யாய்ப் பார்த்துக்கொண்டிருக்க, மணியும், 6 ஆய்விட்டது
விடிந்தது.

23-4-13. இன்றையதினம் காலையில் ஈச்வர தியான
மும் தேவிகவசபாராயணமும், முதலியவைகளைப் பண்ணி
எம். எம். ராவ், பஹதூர், சுந்திரமூர்த்தி முதலியார் அவர்
கள் புத்திரர்களுக்கு சம்ஸ்கிருதபாடம் சொல்லி குடுப்
பதற்கு போய் 8-மணிமுதல் 9-மணிவரையிலும் பாடங்
களை நடத்தி மறுபடியும் ஸங்கத்தை வந்து பார்க்க, கதவு
பூட்டப்பட்டிருந்தது. வாசலிலேயே காத்துக்கொண்டிருந்
தனர் பிரதிதினமும் சுமார் மத்தியானம் 12-மணிக்கு வரப்
பட்ட சிங்காரமுதலியார் வாராமல் ஹோட்டலில் போஜனம்
செய்து கொண்டு ஆபீஸுக்கு போய்விட்டார். அவர் (இந்த
வேதியர்) சங்கத்தினுடைய பூட்டை திறக்காமல் நாம்
வந்து விட்டோமே, ஸ்நானம் முதலியவைகள் எப்படி
நடத்திக்கொள்வார் என்று பச்சாத்தாப குணமில்லாமல்
தன் பசியைப்போல் எதிரியின் பசியை நினைக்காமல்
சாயந்திரம் 7-மணிக்கு வந்து 8-மணிவரையில், கார்க்கப்
போட்டு பூட்டை திறந்தார். பிறகு பழங்களை புசித்து
நீரைக்குடித்து சந்தோஷித்து இருந்தார். அப்புறம் சங்
கத்தார் உபத்திரவப்படுத்த கோதுமரவை அல்வா பண்ணி
அவர்களுக்கும் அவர்களுடைய ஸ்நேகிதர்களுக்கும் குடு
த்து பிறகு யெதாப்பிரகாரம் நிஷ்டையிலிருந்து சித்தங்
களை பார்த்துக்கொண்டு ஆனந்தமடைந்துக் கொண்டி
ருந்தார். பிறகு ஷண்முகியை பார்த்தவுடன் நாத பேதங்
கள், தெரிந்தது.

21-1-14 இந்த தேதியில் நித்திய கிருத்தியங்களை
தீர்த்துக்கொண்டு லவண மிச்ருதமாக, ரவா ஹாரத்தை
பண்ணினார். அப்புறம் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ
அவர்களுடைய ஜீவிதத்தை படிக்க பிராப்தித்த
உடனே "ஸாதனத்தின் பிரயோசனம்". என்று இருக்கிற
பாகம் வந்தது. அதைப்படிக்க தொடங்கின உடனே சில
நேரத்திற்குள் ஸாயங்காலம் ஆய்விட்டது. அன்றய திநம்
ராத்திரி ஷண்முகிமுத்ராவலோகியாய் ஸித்தாஸநத்தில்
இருக்கின்றபோது கிழேபோட்டு இருக்கிரயந்திரம் காணப்
பட்டது. கேசரமுத்ராமார்க்கத்திலேயும் இப்படியே யிருந்
தது. மத்தியில் பஞ்சகோணங்களும் அதற்கு மேலே வர்ணா
காரமும் இவையெல்லாம் மின்னல் கோடிகளைப்போல
பிரகாசித்துக்கொண்டு இருந்தது.

25-4-13 தேதி, விடியற்காலம் த்யானாதி கார்யங்களை
நடத்தி ஸங்கத்தில் கதவு பூட்டிக்கொண்டு போன கார
ணத்தினால் அநுஷ்டானத்திற்கு பிடன் ஜலங்கள் உண்
டாயிற்று. இப்படி யிருக்கையில் ஸங்கத்தாருடைய உபத்
திரவத்தால்மறுபடியும் காரகூாரங்களுடன்ஸாப்பிடவேண்
டிய விதியேர்பட்டது. பிறகும் ஸங்கத்தினர் வதை
வுதாக. அப்படி ஹோட்டலில் ஸாப்பிட்டதனாலே வயற்று
வலி யேற்பட்டது. இந்தபாதைபடமுடியாமல் கோதுமை
மாவினால் ஆகாரங்கள் யேற்படுத்திக்கொண்டாலே தவிர
முடியாத்கஷ்டமாய் யிருந்தது. ஈச்வரன் ரக்ஷகட்டம்
யென்று யிருந்தார். அன்றைக்கி கொஞ்சம் நித்திரை வந்
தது. அதற்கு கொஞ்சமிடங் குடுக்க மிகவும் அனர்த்தம்
உண்டாயிற்று. அப்புறம் நித்திரையில், ஸ்வர்ண தாந்திகளு
டன்ப்ராம்ஹணரூபம் உண்டாய் தரிசனம் குடுத்து,தைர்யம்
விடவேண்டாம் போகலாம் உன் கோரிக்கை முடிந்துவிடும்



யென்று மறைத்தனர். அப்புறம் சென்னைக்கு வந்து பதூ
ரிக்கி போகும் காலத்தில், நடந்த விஷயம்.

26-5-13 தேதியில் நடக்கும் விஷயம் யெழுதுகின்றார்
ருத்திரப்ரயாகியிலிருந்து அகஸ்திய முனி மகாமில்கேதார
கங்காநதி ஸ்நானம் ஆசரித்து த்யானத்திலிருக்கும்போது
அகஸ்தியர் தரிசனம் ஆயிற்று. அவர்கள் சில விஷயங்
களைச் சொன்னார். ஆநந்தத்தோடு தரிசனம் பண்ணி
கேட்டேன். அப்புறம் பரமேச்வரி தரிசனம் ஆயிற்று அந்
தம்மன் சில விஷயங்களைச் சொன்னார்.மஹாரூலினி தூர்க்
காம்பா தரிசனமாயிற்று பாலிகா ரூபமாக அந்தம்மன் சில
விஷயங்களைச் சொன்னார் நான் எனக்கு பரப்ரம்மத்தி
னிடத்திலேயே த்யானமிருந்தால் போதும் யென்றிருந்
தார். அப்புரம் (மேல்கண்ட விஷயமும் கீழே யெழுதப்
போகிற விஷயமும் யாவும் ஸ்வாமிகளின் கைபுஸ்தகத்தில்
யிருந்தபடிக்கு)

27-5-13-தேதி பாதசாரியாய் நடந்துக்கொண்டு நடு
வில் நின்று மறுநாள் 28-5-13-ந்தேதி பிரயாணத்தில்
மேலே சவாலக்ஷம், லக்ஷத்திருபத்தை யாயரம் பருவதங்
களில் யேரி யிரங்கிக்கொண்டு பதரிகேதார் சேர்ந்தேன்.
அவ்விடத்திற்க்கு எகுவதற்க்குள்ளே மகாச்ரமயாய்
ப்ராணங்கள் துடித்தது. போகமுடியாமல் பாகிரதி
உற்பத்தி ஸ்தானத்தில் புரோக்ஷண ஸ்நானம் செய்தேன்.
அப்பொழுது அங்கே ஸ்நானம் பண்ணுவதற்கு சௌகரிய
மில்லாமல் பனிஜலமாக குளிர்ந்து இருந்தது சொல்லமுடி
யாது. சரீரம் அதிபல ஹீனமாயிருந்தபடியால் ஸ்நானத்
திற்கு சௌகரியமாயில்லாதபடியால் புரோக்ஷித்துக் கொண்
டேன் அப்புரம் கேதாரேச்வரனை தரிசித்து பூத்பேடா
நிவேதித்து ஆகாரம் பண்ணி பூரி பேடா முதலிய அத்
தேச பல ஹாரங்களை ஆகாரம் பண்ணி, அன்றைய தினம்

ராத்திரி அசோகத்திரத்தில் நித்திரை செய்து மறுநாள் காலையில் யெழுந்து பிரயாணத்திற்கு முந்தி பாலும் பூரியும் முதலியவைகளை நைவேதித்தவுடனே ஸ்வாமி எதிரில் சூக்ஷ்மரூபியாய் நின்று த்ருப்தியடைந்தேன். உன் யாத்ராபலம் சபலமாயிற்று யென்று அதிருச்யமானார். நானே நாராயணன் நானே ஸர்வமும் என்று சொன்னது போலிருந்தது. அப்புறம் த்யானம் பண்ணி நித்யக்ருத்யங்களைத் தீர்த்துக்கொண்டு ஸ்திரசித்தத்தோடு இருந்தேன்.

29-5-13-தேதி முதல் 8, நாள் வரையில் பதரி நாராயணாச்ரமம் என்றும் "பதரிநாத்" என்றும் வைகுண்டத்தை சேருவதற்காக நடப்பதினாலே எழுதுவதற்கு சௌகரியமில்லாததினால் 8-6-13 சாயங்காலம் பதரி நாராயணத்தைச் சேர்ந்து அவ்விடத்தில் த்யானித்துக்கொண்டிருக்கும்போது பதரி நாராயண ஸ்வாமி தரிசனமாயிற்று.

அப்புறம் தப்த குண்டத்தில் ஸ்நானம் பண்ணி நாராயண ஸ்வாமியை தரிசித்து ஸ்ரீ ப்ரம்ம கபாலத்திற்குபோய் பிதுருக்களுக்கு பிண்டங்கள் போட்டு, ஆத்மபிண்டமும் போட்டுக்கொண்டு மறுநாள் யிருந்து அதற்கு மறுதினம் புறப்படுவோம் என்று இருக்க தேவாலயத்தில் ஸ்வாமி தரிசனமாயிற்று. அவர்களின் அனுக்ரஹத்தினாலே ஸம்பூர்ணமான மார்க்கம் தெரிந்தது. 8, 9, 10-6-13 இம்மூன்று இராத்திரிகள் அவ்விடமிருக்க நிச்சயத்திருந்தேன். ஸ்ரீ பதரி நாராயணருடைய அக்ஞை எவ்வளவோ அவ்வளவு வரையிலும் இருக்கவேண்டியதாக நேரிட்டது. நித்யமும் பஞ்சசிலைமத்தியத்தில் உட்கார்ந்து ஜபித்துக்கொண்டிருந்தேன்.

11-6-13-தேதி காலையில் தூங்கி எழுந்திருக்குறதற்குள் தலைமுடி வளர்த்துக்கொண்டு நிறைந்த காஷாய



அங்கியுடன் ஜபமாலை கோமுககோசத்தில் திருப்பிக்கொண்டு காணப்பட்டு சொன்னது, "என்னவென்றால் த்யானம் விடாமலிரு, அப்படியே அனுக்ரஹிக்க வேணுமென்று ப்ரார்த்தித்தேன். இதற்குள் த்யான அவஸ்தையிலிருந்து விலகி சமயல் போஜனங்கள் ஆயிற்று. அங்கேயே, 15-நாள் இருந்தேன் பிறகு அங்கிருந்து புறப்பட்டு 15-நாள்கள் ஆனபின் காசி க்ஷேத்திரம் சேர்ந்தேன்.

12-6-13-தேதி பாத்திரபத பஹுள ஏகாதசி தினத்தில் காலையில் தத்திராத்ரேய மடம்ஹநுமத காட்டில் யிருக்கும் வித்யார்த்திகளுடைய சட்டாம்பிள்ளை யாராகிய க்ருஷ்ணமாசாரியார் யென்னப்பட்டவர் மூலமாய் ப்ராணாந்தகம் யேற்பட்டது. ஈச்வரக்ருபா கடாக்ஷத்தால் பிழைத்து கொமாரஸ்வாமி மடத்தின் மானேஜர் அவர்கள் வெங்கட்ராமய்யர் மூலமாய் ஆதரிக்கப்பட்டு, ஸ்கந்தஷஷ்டியில் சுப்ரம்மண்ணி ஸ்வாமிகள் கல்யாணோச் சவத்திற்கு கதையொன்று ஸங்கீதயுக்தமாய் செய்து முடித்து, அவ்விடத்தில் செய்த ஸகாயத்தைக் கொண்டு, கல்கத்தாவைச் சேர்ந்த ராமக்ருஷ்ண பூருக்குவந்து வி. கோபாலக்ருஷ்ணய்யர் வீட்டிலிறங்கி, அவருடையபெரும் ஸகாயத்தால் கதைகளை செய்து, அவ்விடத்தின் ஸஹாயத்தால் ப்லாக்கி மிடியில் யிறங்கி வேணுகோபாலய்யங்கார், வெங்கட்ராமசர்ம, யிவர்களுடையசகாயத்தால்அங்கேயும்(3)கதைகளை செய்து அம்மூலமாய் கிடைத்த த்ரவ்ய ஸகாயத்தால், மாயவரம் வந்து அங்கே 5-நாள்கள் கதையின் மூலமாய் வரும் பணத்தினாலே 1500-ப் ராம்மண ஸமாராதனைப்பண்ணி முடித்து, அவ்விடமிருந்து, திருவண்ணாமலையில் வி. நரஸிங்கராவ் பி. ஏ. வக்கில், அவருதகப்பனாராகிய வெங்கிட்

ராவ் யென்னும் பென்ஷ. மேஜஸ்ட்ரீட் அவர்களுடைய ஸஹாயத்தால் 600 ப்ராம்மணர்களுக்கு ஸமாராதனையும் செய்து, அவ்விடம் தவம் முடிந்தவுடன் பழனிக்குப்போய் அவ்விடம் கலயம் புத்தூரில், 700 பிராம்மணர்களுக்கு ஸமாராதனை செய்து, அப்புறம் அவ்விடம் விட்டு திண்டுக்கல்லில் பெரிய வுபந்யாஸம் செய்து, பிறகு அவ்விடம் விட்டு யெலத்தூர் யென்கிற கிராமத்தில் சாதுர்மாஸ்யம் நடத்தி, பிறகு விச்வரூப யாத்திரைக்காக திருவண்ணாமலைக்கு வந்து, அத்திருந்து லோகத்தில் முக்திபெறும் ஆவலுள்ளவர்கள்னிமித்யமாய் தத்வார்த ப்ரதர்சினி, யென்னும். வேதாந்த கீர்த்தனைகள் முருகர் பேரில் தமிழில்பாடி சென்னப்பட்டணத்தில் அச்சிட்டு, தெலுங்கு பாஷையிலும் கந்த பத்யரூபமாக ஓர் புஸ்தகம் அவருடைய சரித்திரத்துடன் அச்சிட்டு, வெளியிட்டு, பிறகு அருணசலத்திலேயோ, தக்ஷிண கைலாசத்திலோ ஈச்வராக்ஞைப் போலிருக்கும்படி நடக்கும் 3-9-1930 யிதற்குள்ளாவது யிதற்குச்சமீபமாயாவது, ஸமாதியில் கைவல்யமடைவார். இன்னவருடைய சரித்திரம் தெலுங்கிலும் தமிழிலும்யெழுதி அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டு புஸ்தகங்களில் யிருக்கிரமர்மமான நிஜமாய் யிருக்கும், யெங்கும் நிறைந்த பொருளுடைய அர்தம் தெரியவேண்டுமென்றாலும், கீர்தனைகள்பாடத்தெரியவேண்டுமென்றாலும் அடக்க வணக்கத்துடன் யிருக்கும் சிஷ்யர்களை நன்று [illegible]வர்மனம்போல் சோதித்த பிறகு தாங்கள் நிஜமான வழியை வுபதேசமடையலாம், யென்று யெங்களுடைய நிச்சயம் இனி நாங்கள் தெரிந்தவரையில் யெழு



னோம், மன்னித்து ஸாரத்தை க்ரஹிப்பீர்யென்று ப்ரார்திக்கின்றோம்.

ஸ்ரீ பதரி, நாராயணஸ்வாமி ஆக்ஞாபித்தபெரும் நன்மை.

திருவண்ணாமலையிலாவது ஸ்ரீ தக்ஷிணகைலாசமென்று உரைக்கப்பட்ட ஸ்ரீகாளஹஸ்தி என்னும் வாயுலிங்க மகா க்ஷேத்திரத்தில் லோகோபகாரமாக மகான்களாகிய யோகீசுவரர்கள் சாதுக்களாகிய சன்னியாசிகள் இறங்கி இருந்து ஸ்வர்ணமுகரீ நதிஸ்நான ஸ்வாமி தர்சனாதிகள் பண்ண அனுகூலமாக யோகமடம் ஒன்றை கட்டச்சொல்லி மாத்திரம் ஆக்ஞாபித்திருப்பதால் தாங்களைப்போல ஞாதாக்கள் இப்பெரும் புண்ணியகாரியத்தை எவ்விதம் நடத்தினால் சௌகரியமோ அவ்விதமாய் நடத்தி முடித்துக்கொடுக்கவும். சத்கர்மாசரணையினால் ஞானமும் அந்த ஞானத்தினால் மோக்ஷமும் அந்த மோக்ஷத்தினால் அகண்ட பரப்பிரும்மானந்த ஐக்கியமடைய சாதனமாகையால் அர்தஸகாயம் பண்ணி மகாபுண்ணியமும் மகாகீர்த்தியும் அடைவீர்கள் என்று பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு, ஸ்ரீமத்பரமஹம்ஸ, பரப்பிரம்மானந்தயோகீந்த்ர ஸரஸ்வதி சுவாமிகள். சிஷ்யர்களிலொருவர், யெழுதினது.

(ஸகுணோபாஸனை)

அஸ்யஸ்ரீ ஸுப்ரம்ஹண்ய மஹா[illegible]ஸ்ய, நாரத பகவான்ருஷஹி, அனுஷ்டுபசந்தஹ, ஸ்ரீஸுப்ரம்ஹண்யோ தேவதா, ச்லாம், பீஜம், க்லீம், சக்திஹி, க்லூம், கீலகம், ஸ்ரீஸுப்ரம்ஹண்யப்ராஸாத ஸித்யர்தே ஜபேவினியோகஹ..

## அதகரந்யாஸம்.

ஓம், சம், சரஹணபவ, அம்.
ஓம், ரம், ரஹணபவச, தர்ஜநீ.
ஓம், ஹம், ஹணபவசர, மத்யமா.
ஓம், ணம், ணபவசரஹ, அநாமிகா.
ஓம், பம், பவசரஹண, கநிஷ்டி.
ஓம், வம், வசரஹணப, கரதல.
ஓம், யேவம்விதம் அங்கந்யாஸம் குர்யாத்.
பூர்புவஸ்வரோமிதி, திக்பந்தஹ.

(த்யானம்)

கநககுண்டல மண்டித ஷண்முகம்—வநஜராஜவிராஜித சோபிதம்—நிகிலசஸ்த்ரசராஸநதாரிணம்-சரவணோத்பவமீஸ்வரதம் பஜே. மூ—ஓம், ஸ்ரீம், க்லீம், ஹ்ரீம், சரஹணபவ.

(அவருடைய ஸர்டிபிகேட்டுகள், யிக்காலத்திலுள்ள நவநாகரீகர்கள் பார்வையிடுதற்கு அச்சிடுகிறோம்.)



## ராகம் சங்கராபரணம்-ஆதிதாளம்.

ப. ஓடிவா பரப்ரஹ்மமே ஓடிவா பரப்ரம்ஹமே.

அ. கூடவே நீயிருக்காமல்-மன-குரங்கையென்னிடம் சேர்க்காமல் (ஓ)

ச. பாழான பரப்ரம்ஹமே-பசியெடுத்தாலது கர்மமே சோறுண்டு சுப்ரம்ஹண்யன்-சொன்ன சொல்லுமர்மமே (ஓ)

2. யெழுக்கவளம் போடுவேன்-நீ-எங்கே போனாலும் தேடுவேன்— வாழ வாழயன் உனைப்பிரியா—வரித்திக் கொண்டால் கூடுவேன். (ஓ)

3. நிரஞ்ஜனபரமஹமே-நிர்விகார ப்ரம்ஹமே பரப்ரம்ஹானந்தயோகி-பாடும்பாட்டுகள் ப்ரம்ஹமே. (ஓ)

## ஓர்பெருநன்மை.

ஞானவான்களே! ஸகலஜனங்களும் கவனிக்கவேண்டிய விஷயம், ஒவ்வொரு வம்சத்திலும் ஒருவன் ஞானியாய்விட்டால், அவ்வம்சந்திக்கு பின்னேழு தலைமுறை, முன்னேழு தலைமுறை தரித்துவிடுவார்கள். என்றுசொல்லப்பட்ட ப்ரமாணவாக்யம் யெல்லாரும் அறிந்தவர்களாகையால், திருவண்ணாமலையில் ஸ்ரீஸ்வாமிகள் ஞானத்தை உண்டுபண்ணக்கூடிய ஞானநூல்களை சொல்லிக்கொடுக்கவும், அநேகருக்கு ஸாதனங்களைக்காட்டிக் கொடுக்கவும், பகவானுடைய ஆக்ஞையால்வந்திருப்பதால், ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு லோகத்தில் பெரும்நன்மை செய்ய உத்தேசித்திருக்கும் ஸமயமாய் வாய்க்கப்பட்டதால், புதுவஸ்திரத்தில் சாயம் பிடிப்பதுப்போல் பழுபவஸ்திரத்தில் சாயும் பிடிக்காது, அல்லவா, ஆகையால், தங்கள் தங்கள் புத்திரனை ஒருவருக்கதிகரித்து யிருந்தால் யிந்த ப்ரம்ஹ வித்தையில் அப்யாஸம் செய்ய ஒருவனை அனுப்பி அவ்வாறனுப்பின சிறுவர்

களுக்கு தகந்த, ஸௌகரியங்கள் நடப்பதற்காக, ஷை திரு
வண்ணாமலையில் மடம் ஒன்று ஸ்தாபிக்க தகுந்தத் திரவிய
ஸகாயம் செய்து மடத்தையும், தகந்தவர்களாக பாரமார்திக
தனமுண்டானவர்கள் முன்னின்று யிப்பெருமையையடை
வீர்களென்று நிச்சயம் செய்து தெரியப்படுத்துகிறோம்.
சீக்கிரத்தில் முடிப்பீர்கள். (ஸ்ரீமத் பரமஹம்ஸ பரப்ரம்ஹா
னந்த யோகீந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் மடம்)

ஓம்.

ஞானவான்களே ஒவ்வொரு வம்சத்திலும் சாதாரண
மாக சந்தான அபிவிருத்தி ஒரு புத்திரருக்கு மேல்பிறந்து
இருக்கலாம். அப்படிப்பட்ட புத்திர பாக்கியம் அடைய
வதற்கு ஒவ்வொருவரும் அநேகதபசுகள் செய்கிறார்கள்.

I. ராமேஸ்வர யாத்திரை II. காசியாத்திரை
III. ஸர்பசாந்தி IV. நாகஷை பிரதிஷ்டை V. ரகுராயந்
தர்மங்கள் இத்தியாதி கர்மங்களை எல்லாம் செய்கிறார்கள்
அல்லவா, அப்படி புத்திரர்கள் உண்டான பிறகு, அவர்
களாலே தாங்கள் அடையும் நற்கதி இன்னதென்று தீர்மா
னித்துக் கொள்ளவேண்டு மல்லவா. (சத்தியம் மாதா பிதா
ஞானம்) என்று சொல்லுவது போலவும் (ஞானமே
மோக்ஷம் ஸாதனமாயது) என்று சொல்லப்பட்ட பிரமா
ணங்களின்படிக்கு தங்கள் தங்கள் வம்சத்தில் பிறக்கப்
பட்ட ஒவ்வொரு புத்திரர்களையும் அப்பேர்ப்பட்ட உத்
தம ஞானத்தை சாதிப்பதற்கு தகுந்த ஸாதுக்களி
டத்தில் அனுப்பி அவர்களுக்கு தகுந்த விதியோபசாரங்
களையும் செய்து அந்த பெரியோர்கள் மனம்குளிர செய்வதினால்
அடைந்த ஞானத்தினாலே அவர் அவர்களை புத்திரர்கள்,
அவர் அவர்கள் வம்சத்தில் மின் ஏழுதலைமுறை பின் ஏழு
தலைமுறை ரட்சிக்க செய்வார்கள் அல்லவா எப்படி என்றால்,
மழைக்கிறார் இரின்னல்களும், குமரல்களும், காற்றும் இவை



கள் எல்லாம் எப்படி உண்டாகுமோ, அதைப்போல் தன்னு
டைய புத்திரர்களுக்கு ஹரிகதா ஸத்காலக்ஷேபங்களை கேழ்க்க
வும் கோவில் முதலிய திவ்ய ஸ்தலங்களுக்கும் போய் ஸ்வாமி தரி
சனம் செய்கிறதற்குணங்களை கண்டு அப்புத்திரர்களை இப்
படி திவ்விய ஞானமடைய, தகுந்த பெரியோர்களிடத்தி
லாவது, ஷை கண்ட மடத்திற்கு அதிகாரிகளான ஸ்ரீமத்பர
மஹம்ஸ பரபிரம்மானந்த யோகீந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளி
டத்திலாவது, விட்டு, அந்த பெருந்தன்மையை அடைய
லாம், இக்காரியங்களை செய்து முடிப்பதற்காக, பதறி
நாராயண ஸ்வாமிகள் ஆக்ஞையினால் வந்திருப்பதால், இக்
காரியம் முடிக்க தக்கவர் இவர்தான் என்று தெரியவரு
கிறது, நம்புங்கள், அதுவு மன்னியில் இன்னொரு ஸாக்ஷி
யும் சொல்லுகிறேன் கேளுங்கள் விச்வாமித்ரன் பின்னால்,
தசரதர் தன் புத்திரரத்தினங்களாகிய ஸ்ரீராமலக்ஷ்மணர்களை
வசிஷ்டர் அபிப்பிராயப்படி அனுப்ப மறுபடியும் வரும்போது, கல்வி
யான ராமனாய் வந்தது போல், தங்கள், தங்கள், புத்திரர்
கள் ஞானவான்களாய் வருவார்கள். ஆகையாலே, இவ்விஷ
யத்தைப்பற்றி யோசனை செய்யாமல் திருசங்கு ராஜன்
ஸ்வர்கத்தின் கண்ணே இருந்து தலைகீழாகத் தான்
விழும்போது தன்னுடைய தபோபலத்தினாலே, கீழே
விழாமல் நிறுத்தவில்லையா அதுவுமன்றி ஷைபரதிஸ்
ருஷ்டி செய்யவில்லையா, அம்மாதிரியாக தங்கள் தங்கள்
புத்திரர்கள் அடைந்த ஞானத்தினாலே, தங்கள் தங்கள்
வம்சத்தார் ஷைக்கு ஏன் தரிக்க மாட்டார்கள். ஆகை
யால், ஞானவான்களும், தனவான்களும், குணவான்களும்
வித்வான்களும், நன்றாய் யோசித்து இதற்கு தகுந்த மடம்
ஒன்று எப்படியாவது தகுந்த தனஸஹாயம் பூர்த்திக்காக,
தகுந்த முயற்சியும் செய்து அந்த பேராநந்தத்தை
அடைவீர்கள் என்று எழுதி தெரியப்படுத்துகிறோம் இது,

வும் மன்றி, அம்மாதிரியாக தங்கள் புத்திரர்கள் எப்படி திவ்யஞானம் தெரிந்துக் கொள்ளுவார்கள், என்று அறிய தகுந்த சில காரணங்கள் சொல்லிவிட்டோம், இக்காரணங்களாலேயே நன்றாய்த் தெரியப்படும். லோகத்தில் மழை வருவதற்கு முந்தி எப்படி ஆகாயத்தில் மேகமும், மின்னலும் குமரலும், பிறைகள் உண்டாகுமோ, பிள்ளைகள் ஸ்வாமிகளிடத்தில் தெய்வபக்தியும், பெரியோரைவணங்குவதும், வித்யாதிகுணங்களாலே ஞானமிருக்குமென்று அறியலாம் அப்பெரும் தன்மை அடையும் பொருட்டு தகுந்த ஞானநூல்களை படிப்பிக்கவும், படித்ததை அறிய தகுந்த, அனுபவங்களை, சொல்லிக் காட்டுவதும், செய்துகாட்டுவதும், தாங்களாய் அனுபவித்து தெரிந்துகொள்வதும் — ஆக, மூன்று விதங்களாக, அறிவிக்கவேண்டிய வித்தையாய் இருக்கிறதனாலே, நிதானமாய், நிர்கர்ஷிசந்தோஷ "செய்து கூடிய க்கிரமத்தில் நிறைவேத்துவீர் என்று நம்பி சிஷ்யகண்ட விஸ்வர்களால் எழுதப்பட்டு, வெளியிடப்பட்டது.

இப்படிக்கு,
ஸ்ரீமத்பரமஹம்ஸபர பிரம்மாநந்த யோகீந்த்ர
**ஸரஸ்வதி ஸ்வாமிகள்.**

(குருமந்திரம்) (நிர்குணனுபாஸனே)

அஸ்யஸ்ரீ பரப்ரம்மாநந்த ஸரஸ்வதி மஹாமந்த்ரஸ்ய ஆநந்தபரப்ரம்ஹருஷிஹி, அவ்யக்தகாயத்ரீச்சந்தஹ, பிரமாத்மா தேவதா, அம், பீஜம், உம், சக்திஹி, மம், கீலகம், மோக்ஷஸித்யர்தே ஜபேவி நியோகஹ.

அதகரந்யாஸம்.

ஓம். அம், அங்குஷ்டாப்யாம்நமஹ.
ஓம். உம், தர்ஜநீப்யாம் ஸ்வாஹா.
ஓம். மம், மத்யமாப்யாம் வஷட்.



ஓம். அம், அநாமிகாப்யாம் ஹூம்.
ஓம். உம், கநிஷ்டிகாப்யாம் வெளஷட்.
ஓம். மம், கரதல கரப்ருஷ்டாப்யாம்பட்.

அதாங்கந்யாஸம்.

ஓம். அம், ஹ்ருதயாய நமஹ.
ஓம். உம், சிரஸேஸ்வாஹா.
ஓம். மம், சிகாயைவஷட்.
ஓம். அம், கவசாயஹூம்.
ஓம். உம், நேத்ரத்ரயாய வெளஷட்.
ஓம். மம், அஸ்த்ராயபட்.

பூர்புவஸ்வரோம் யிதிக்பந்தஹ

(த்யானம்.)

1. காஷாயவஸ்திரம்—கரதண்டதாரிணம்.
கமண்டலும் பத்ம—கரேணசக்ரிம்.
நமாமியோகீந்த்ர—ஹரிம் பரப்ரம்.
ஹாநந்த மூர்திம்—ச்ருதலோககீர்திம்.

2. ருத்ராக்ஷ மாலாதர—ப்ரதவந்த்யம்
கஷாத்ரக்ரஹோ—பத்ரவஞ்சநேத்ரம்
பஸ்மானுலேபாங்கித—தேஹயுக்தம்
ஸ்ரீஸச்சிதாநந்த—குரும் நமாமி.

3. பாலார்ககோடி—த்யுதி மப்ரமேயம்
வித்யுல்லதாவ்ருத்த—கதம் பரப்ரம்
ஹானந்த மூர்திம்—த்ரைலோக்ய வேத்யம்
ஆத்மானமத்வய—மஹம்னமாமி.

4. அந்தர்பஹிஸர்வ—மகண்டரூபம்
நமாம்யஹம்—மத்குரும் பரப்ரம்
ஹாநந்த மூர்திம்—அகிலஸ்வரூபம்
ஆதாரமானந்த—மகண்டபோதம்.

5. [illegible] —[illegible]
[illegible] —[illegible]
[illegible] —[illegible]
[illegible] —[illegible].
6. [illegible] —[illegible]
[illegible] —[illegible]
[illegible] —[illegible]
[illegible] —[illegible].

## ௪௨. ஓம் அநமம் பரப்ரம்மணைக்ரோஸ்ரீ
(ஓம் தத்ஸத்.)

இதின் விவரங்களை யெல்லாம், [illegible] தெரிந்துகொண்டாலே தவிர அறிஞர் பரமங்களும் தெரிந்துகொள்வது கஷ்டம். ஆகையாலின் தப்பமை [illegible] விஷயம் யெப்படி யிருக்குமென்று கேட்போர்க்கு, "யெல்லம் யெப்படி யிருக்கு யென்று கேட்டால், இத்திப்பாக யிருக்கின்றதென்று சொல்லலாம், இத்திப்யெப்படி யிருக்கிறதென்றால் வாய்விட்டு நான் அதினுடைய ருசியை அநுபவித்துபார்த்தால் தவிர தெரிந்துக்கொள்ள முடியாதாகையால், சேர்ந்தால் அப்யாஸ விதிகளை அறிஞரடையும் பலங்களையெல்லாம் தெரிந்து கொள்ள, ஸத்குருவுகளிடத்தில் [illegible] சேர்ந்தால் தெரிந்துகொள்ளலாம்.

---

Printed at the T. V. C. Press, Madras.